**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No. 66/2025 - PW-12**

| | |
|---|---|
| Name | திரு. ஜெகன் |
| Husband/Father Name | சரவணன் |
| Village /Area | ஜாகிர்தண்டலம் |
| Taluk | நெமிலி |
| Occupation | தனியார் நிறுவன ஊழியர் |
| Age | 24 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 19.01.2026.

**(எதிரிகள் 2,3,5 ஆஜர். எதிரி 4 கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 2025ம் ஆண்டு காலை 8 மணி அளவில் நானும் எனது மாமா பரந்தாமன் என்பவரும் அரிசி வாங்குவதற்காக பனப்பாக்பம் சென்று கொண்டிருந்த போது தென்மாம்பாக்கம் வழியே செல்லும் போது போலீசார் இரண்டு நபர்களை திருமால்பூரில் நடந்த வழக்கு சம்மந்தமாக விசாரித்து கொண்டிருந்தார்கள். அப்போது பெண் போலீஸ் எதிரிகளை கைது செய்து விசாரித்து கொண்டிருந்ததாகவும் அதற்கு எங்களை சாட்சியாக இருக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். போலீஸ் விசாரணையில் எதிரிகள் மணிகண்டனும் நவீனும் பிரேமுடன் போகும் போது எரித்துவிட்டதாக கூறினார்கள். அதன் பிறகு மேற்படி எதிரிகளை காவல் நிலையத்துக்கு அழைத்துச் செல்வதாக கூறினார். அதன் பிறகு மடிக்கணினியில் போலீசார் எதிரிகள் கூறியதை தட்டச்சு செய்து கொண்டார்கள். பிறகு அதை print எடுத்து வருவதாக கூறி சென்று அதை எடுத்து வந்து எங்களிடம் கையொப்பம் வாங்கினார்கள். மேலும் மணிகண்டனும் நவீனும் எடுத்து வந்த இருசக்கர வாகனத்தை போலீசார் கைப்பற்றி கொண்டு அதில் எங்களிடம் கையொப்பம் வாங்கினார்கள். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் எதிரிகள் மணிகண்டன் மற்றும் நவீன் ஆகியோர்களின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். அவைகள் முறையே **அ.த.சா.ஆ.11 மற்றும் அ.த.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அது

**அ.த.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் இரு சக்கர வாகனம் Hero Splendor plus வாகனம் தான் எதிரி மணிகண்டனமிருந்து கைப்பற்றினார்கள். அது **சா.பொ.3** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**1 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

தென்மாம்பாக்கம் செல்வதற்கு என் மாமா தான் அவருடைய வண்டியில் அழைத்துச் சென்றார். நாங்கள் செல்வதற்கு முன்பே போலீசார் விசாரித்து கொண்டிருந்த இடத்தில் பொது மக்கள் இருந்தார்கள் என்று சொன்னால் இல்லை. நாங்கள் மட்டும் தான் அங்கு இருந்தோம்.

ஆய்வாளர் மற்றும் 3, 4 போலீசார் இருந்தார்கள். நெமிலி காவல் ஆய்வாளர் என்று தான் எங்களிடம் கூறினார்கள். நாங்கள் செல்வதற்கு முன்பே எதிரிகளை விசாரித்து கொண்டிருந்தார்களா என்பது பற்றி எனக்கு தெரியாது.

நாங்கள் செல்வதற்கு முன்பு அங்கு போலீசார் என்ன செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. நாங்கள் சென்ற போது காலை 8.15 மணி இருக்கும். போலீசார் எங்களை மடக்கி சாட்சியாக இருக்குமாறு கேட்டுக் கொண்டார்கள்.

போலீசார் என்னை எதிரிகளை கைது செய்து காவல் நிலையத்துக்கு அழைத்துச் செல்வதாகவும் என்னையும் எனது மாமாவையும் சாட்சியம் அளிக்குமாறு கூறியிருந்தார்கள் என்றால் சரிதான். போலீசார் தான் வாக்குமூலத்தை தட்டச்சு செய்தார் அவர் எந்த காவல் நிலையத்தை சேர்ந்தவர் என்று எனக்கு தெரியாது.

எதிரிகள் மணிகண்டன் நவீன் கூறிய வாக்குமூலத்தை தான் நின்று கொண்டே மடிக்கணினியில் தட்டச்சு செய்தார்கள். எதிரிகள் கூறியதை கையில் போலீசார் எழுதினார்களா என்றால் இல்லை. Splendor Plus கைப்பற்றியதை மட்டும் கையில் எழுதினார்கள்.

மணிகண்டனடைய வாக்குமூலத்தை காலை 8.15 மணிக்கு ஆரம்பித்து 9.15 மணிக்கு முடித்துவிட்டார்கள். அதன் பிறகு நவீன் வாக்குமூலத்தை காலை 9.15 மணிக்கு ஆரம்பித்து 9.45 மணிக்கு முடித்துவிட்டார்கள். மணிகண்டனுடைய வாக்குமூலத்தை பதிவு செய்தவுடன் 9.15 மணிக்கே இருசக்கர வாகனத்தை போலீசார் கைப்பற்றி விட்டார்கள். அந்த இருசக்கர வாகனம் யாருக்கு சொந்தமானது என்று எனக்கு தெரியாது.

நாங்கள் ஒப்புதல் வாக்குமூலத்தில் காலை 10.30க்குள் கையொப்பம் இட்டோம். போலீசார் சென்று print எடுத்து வருவதாக கூறினார்கள் அதனால் நாங்கள் காத்து கொண்டிருந்தோம். print எடுக்க சென்ற போலீசார் யார் என்று எனக்கு தெரியாது. தென்மாம்பாக்கத்திலிருந்து பனப்பாக்கம் பிரியும் வழியில் தான் போலீசார் எதிரிகளை விசாரித்து கொண்டிருந்தார்கள்.

மேற்படி இடத்துக்கும் எங்கள் ஊருக்கும் இடைப்பட்ட தொலைவு சுமார் 3கி.மீ. எங்களுக்கு மணிகண்டன் நவீன் ஆகியோர் யார் என்ற விவரம் பற்றி தெரியாது. நெல்வாய் கண்டிகையில் எனது மாமா இருந்தார். நான் கூறும் இடத்தில் கையொப்பம் இடவில்லை என்றும் காவல் நிலையத்தில் தான் கையொப்பம் இடப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

விசாரித்ததாக கூறப்படும் இடத்துக்கும் தாபாவுக்கும் இடைப்பட்ட தொலைவு 200மீட்டர். போலீசார் விசாரித்து கொண்டிருந்ததாக கூறப்படும் இடத்துக்கு கிழக்கே என்ன இருந்தது என்றால் இரு பக்கங்களிலும் மனை பிரிவுகள் தான் இருந்தது.

கிழக்கே தென்மாம்பாக்கம் செல்லும் சாலையும் மேற்கே பனப்பாக்கத்திற்றுகு செல்லும் சாலையும் இருந்தது. எதிரிகளை விசாரிக்கும் சமயத்தில் பொது மக்கள் யாரும் அந்த இடத்தில் இல்லை. எந்த ஊர் போலீஸ் தட்டச்சு செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் நெமிலி போலீஸ் தான் தட்டச்சு செய்தார்கள்.

எத்தனை பக்கங்கள் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் 3,4 பக்கங்கள் தட்டச்சு செய்யப்பட்டிருக்கும் அதில் தான் நான் கையொப்பம் இட்டேன். நான் கூறுவது பொய் என்றும் போலீஸ் விசாரித்த இடத்தில் நான் கையொப்பம் இட்டது பொய் என்றும் சொன்னால் சரியல்ல.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.02.20 19:15:48 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.